


**08.01. 2025**

தலைப்புச் செய்திகள்

1. ஆந்திர மாநிலம், விசாகபட்டினத்தில் 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று அடிக்கல் நாட்டுவதுடன் முடிவடைந்த திட்டங்களை துவக்கி வைக்கிறார்.

2. வளர்ச்சிக்கான சவால்களை எதிர்கொள்ளும் பாதையில் இந்தியா பயணிப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. சென்னை அண்ணா பல்கலைக்கழக விவகாரத்தில் குற்றவாளிகளுக்கு பாரபட்சமின்றி தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. மதுரை அரிட்டாபட்டியில், டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க தமிழக அரசு அனுமதிக்காது என்று மாநில அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

5. மலேஷிய ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் மாள்விகா பன்சோத் முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

பிரதமர்

ஆந்திர மாநிலம், விசாகபட்டினத்தில் இன்று 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு இன்று பிரதமர் திரு. நரேந்திரமோடி அடிக்கல் நாட்டுவதுடன் முடிவுற்ற திட்டங்களை துவக்கி வைக்கிறார்.

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தின் கீழ் ஒருலட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்படவுள்ள நாட்டின் முதலாவது பசுமை ஹைட்ரஜன் மையம், 19 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே சாலை மேம்பாட்டு திட்டங்கள் இதில் அடங்கும்.

❖❖❖❖❖❖

## ஜெய்சங்கர்

நவீன, உள்ளடக்கிய, வளர்ச்சியடைந்த சமூக கட்டமைப்பிற்கான சவால்களை எதிர்கொள்ளும் பாதையில் இந்தியா பயணிப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்

ஒடிஷா தலைநகர் புபனேஸ்வரில் வெளிநாடுவாழ் இளையோர் மாநாட்டில் இன்று உரையாற்றியஅவர், ஜனநாயக நெறிமுறைகளோடு இந்தியா வேகமாக வளர்ந்து வருவதாக எடுத்துரைத்தார்.

தொழில்நுட்ப ரீதியிலும், கலாச்சார அடிப்படையிலும், இந்தியா வளர்ச்சிப் பாதையில் செல்வதாக கூறியஅவர், இந்திய தேசத்தின் செயல்பாடுகளையும், இலக்குகளையும் இளையோர் புரிந்து கொள்வதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

சுதந்திர நூற்றாண்டு பாதையின், வளர்ச்சியடைந்த பாரத இலக்கில், இந்தியா தற்போது அடியெடுத்து உள்ளதாகவும், இளையோர் நம் தேசத்தை முன்னெடுத்துச் செல்ல முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்

இளையோரின் முயற்சிகளை அரசு ஊக்குவித்து வருவதாக கூறியஅவர், வெளிநாடுவாழ் இளையோர் நம்முடன் தொடர்பு கொண்டிருக்கும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

இந்த 3 நாள் மாநாட்டில் நாளை பிரதமர் உரையாற்றுகிறார்.

75 நாடுகளை சேர்ந்த 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநாடு வாழ் இந்தியர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖

## ராஜ்நாத் சிங்

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் மாலத்தீவு பாதுகாப்பு அமைச்சர் திரு. முகமது காசனுடன் புதுதில்லியில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொண்டார்

பரஸ்பர பயிற்சி, ராணுவ ஒத்துழைப்பு, பாதுகாப்பு திட்டங்களில் ஒத்திகை பயிற்சி போன்றவை குறித்து இதில் ஆராயப்பட்டது.

3 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள மாலத்தீவு பாதுகாப்பு அமைச்சர் கோவா மற்றும் மும்பைக்கும் செல்கிறார்

இந்தியாவின் அண்டை நாடுகள் கொள்கையில் மாநிலத்தீவு சிறப்பிடம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

## ஒரே நாடு ஒரே தேர்தல்

ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் முதல் கூட்டம் புதுதில்லியில் தற்போது நடைபெறுகிறது.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய இக்குழுவின் தலைவரும், பி.ஜே.பி. நாடாளுமன்ற உறுப்பினருமான **P.P.** சவுத்ரி, இந்த கூட்டத்தின் முதல் நாளான இன்று இந்த மசோதா குறித்து சம்மந்தப்பட்ட அமைச்சகம் எடுத்துரைக்கும் என்றார்.

இதுதொடர்பான அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து முடிவெடுக்கப்படும் என குறிப்பிட்டார்.

39 உறுப்பினர்களை கொண்ட நாடாளுமன்ற கூட்டுக்குழுவினர், வரவிருக்கும் நாடாளுமன்ற கூட்டத்தொடரின் கடைசி வாரத்தில் தங்களது அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளனர்.

❖❖❖❖❖❖

<u>சட்டப்பேரவை - அண்ணா பல்கலைக்கழகம்</u>

சென்னை அண்ணா பல்கலைக்கழக விவகாரத்தில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும், பாரபட்சமின்றி கடுமையான தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதுதொடர்பான கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது பேசிய முதலமைச்சர், இது தொடர்பான ஆதாரம் எதிர்கட்சிகளிடம் இருந்தால் புலன் விசாரணை குழுவிடம் தாராளமாக தெரிவிக்கலாம் என குறிப்பிட்டார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களில் அரசு எடுக்கும் நடவடிக்கைகளில் வீண்பழி சுமத்த வேண்டாம் என்றும், மலிவான செயல்களில் ஈடுபட வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

மகளிருக்கு எதிரான குற்றங்களை அரசு இரும்புகரம் கொண்டு நடவடிக்கை எடுத்து வருவதாக கூறினார்.

இந்த வழக்கில் 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் என்றார்

தமிழ்நாட்டில் தான் அதிகளவில் மகளிர் வேலைக்கு செல்வதாக குறிப்பிட்ட முதலமைச்சர், பெண்களுக்கு பாதுகாப்பான நகரங்கள் பட்டியலில் சென்னை, கோவை போன்ற நகரங்கள் முதலிடத்தில் உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர் திமுக உறுப்பினர் இல்லை என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

<u>போராட்டம் - முதலமைச்சர்</u>

தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்த அரசிடம் முன் அனுமதி பெற வேண்டியது அவசியம் என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்

சட்டப்பேரவையில் பா.ம.க. உறுப்பினர் திரு. ஜி.கே. மணி இதுதொடர்பாக கேள்வி எழுப்பி பேசுகையில், எதிர்கட்சிகள் போராட்டம் நடத்த அனுமதி வழங்கப்படவில்லை என்று குற்றம் சாட்டினார்.

இதற்கு பதிலளித்த முதலமைச்சர், முன் அனுமதி பெறாமல் போராட்டம் நடத்திய திமுகவினர் மீதும் வழக்கு போடப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

ஆளும் கட்சியாக இருந்தாலும் அனுமதி பெறாமல் பேராட்டம் நடத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

அரசால் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே போராட்டம் நடத்த அனுமதிக்கப்படும் என்று கூறிய முதலமைச்சர் இதற்கு முன் அனுமதி அவசியம் என்றார்.

எதிர்கட்சிகளின் பல்வேறு போராட்டங்கள் அனுமதியுடன் நடைபெற்றதை முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖

<u>டங்ஸ்டன்</u>

மதுரை அரிட்டாபட்டியில், டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க தமிழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்று மாநில சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு உறுதிபட தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதுதொடர்பான கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்து பேசியஅமைச்சர், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பேரவையில் ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக கூறினார்.

இவ்விவகாரத்தில் அஇஅதிமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தம்பிதுரை, மாநிலங்களவையில் எதிர்ப்பு எதையும் தெரிவிக்கவில்லை என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த திட்டம் வருவதற்கு மூலகாரணமே அஇஅதிமுக தான் என்று கூறியஅவர், சுரங்கத்திற்கான ஏலம் விடப்போவதாக மத்திய அரசு கூறியபோது, திமுக எதிர்ப்பு தெரிவித்ததை சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖

<u>சட்டப்பேரவை - கேள்வி நேரம் : உதயநிதி</u>

தமிழ்நாட்டில் இதுவரை ஒருகோடியே 14 லட்சத்து 65 ஆயிரத்து 525 பெண்கள் மகளிர் உரிமைத் தொகை பெற்று வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், திண்டுக்கல் மாவட்டத்தில் 4 லட்சத்து 897 பெண்களும்,

அங்குள்ள வேடச்சந்தூரில் மட்டும் 62 ஆயிரம் மகளிரும் உரிமைத்தொகை பெறுவதாக கூறினார்.

நிலுவையில் உள்ள மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியான அனைவருக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

<u>பேரவையில் கேள்வி நேரத்தின் போது வெளியான சில தகவல்கள்</u>

தமிழ்நாட்டில் அணைகளை பராமரிக்க 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் கூறினார்.

ஓசூர் மாநகராட்சி பகுதியில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித்திட்டங்கள் அறிவிக்கப் பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

ஓசூரில் தடையின்றி குடிநீர் வழங்க புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்

மாநகராட்சி, நகராட்சிகளுடன், ஊராட்சிகளை இணைப்பது குறித்து பொதுமக்கள் கருத்து தெரிவிக்க 120 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

<u>வெளிநடப்பு</u>

சட்டப் பேரவையிலிருந்து அஇஅதிமுக உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தனர்.

பேரவையில் அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை கவனஈர்ப்பு தீர்மானத்தின் மீது முதலமைச்சர், பேசும் போது பொள்ளாச்சியில் பாலியல் சம்பவம் பற்றி தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அஇஅதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

❖❖❖❖❖❖

<u>முதலமைச்சர் வாழ்த்து</u>

இஸ்ரோவின் புதிய தலைவராக தமிழ்நாட்டை சேர்ந்த திரு. நாராயணன் நியமிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவரது தலைமையில் இஸ்ரோ உயரங்களை எட்ட வாழ்த்திய முதலமைச்சர், தமிழகமாணவர்கள் சாதனையாளர்களாக உருவாக இது ஊக்கமளிக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖

<u>இருவரி</u>

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி பருத்திப்பட்டு சூழலியல் பூங்காவில் தமிழக அரசின் நூலகத்திற்கான முழுநேர கிளை கட்டிடத்தை மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. சா.மு. நாசர் இன்று திறந்துவைத்தார்.

கடலூர் மாவட்டத்தில் தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் நாளைமறுநாள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் பொங்கல் சிறப்பு தொகுப்பு வழங்குவது தொடர்பாக புகார் இருந்தால், மாவட்ட நிர்வாகத்திடம் தெரிவிக்கலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொங்கல் தொகுப்பு வழங்குவதற்கான செங்கரும்பு தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டிருப்பதாகவும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

திருச்சி வாய்ஸ் .

திருச்சியில் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் சார்பில் அரசு இல்லங்களில் பராமரிக்கப்படும் குழந்தைகள் சுற்றுலாவிற்கு அழைத்து செல்லப் பட்டிருப்பதாக இப்பிரிவின் அலுவலர் திருமதி. ஸ்ரீவித்யா தெரிவித்தார்.

.... வாய்ஸ் ....

❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

மலேஷிய ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் மாள்விகா பன்சோத் முன்னேறியுள்ளார்.

பன்சோத் - மலேசியாவின் ஜின் வே-யை 21-15, 21-16 என்ற செட்களில் வென்றார்.

கலப்பு இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் துருவ்கபிலா, தனிஷா கிறாஸ்டோ இணையும்

சதீஷ் கருணாகரன், ஆத்யா வாரியத் இணையும் முன்னேறியுள்ளன.

ஆடவர் ஒற்றையர் பிரிவின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு ஹெச். எஸ். பிரணாய் தகுதிபெற்றுள்ளார்.

ஆடவர் இரட்டையர் சுற்று ஆட்டங்களில் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணையும்

மகளிர் இரட்டையர் பிரிவில் தனிஷா கிறாஸ்டோ, அஸ்வினி பொன்னப்பா இணையும் இன்று களம்காண்கின்றன.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.